## பாஸ்கா பெருவிழா வாழ்த்துச் செய்தி

# கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் அருள்பணியாளர்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவருக்குமான பேராயர் மேதகு ஜூலியன் லியாவ் பெங் கிம் அவர்களின் வாழ்த்துச் செய்தி

கிறிஸ்துவில் என் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே,

இந்த 2020 பாஸ்கா பெருவிழாவானது மரபுவழி வந்த சடங்குகளிலும் பாரம்பரிய வழிபாட்டிலும் ஒரு விசுவாசக் குடும்பமாக பங்கேற்க இயலாத ஒரு பாஸ்கா பெருவிழாவாக நினைவில் கொள்ளப்படும். இது திருமுழுக்குத் தொட்டி காலியாகவும் உலர்ந்தும் காணப்படும் பாஸ்காவாக உள்ளது. இருக்கைகள் காலியாகவும் ஆலய மணி ஓசையின்றியும் இந்த பாஸ்கா கடக்கிறது. நாம் ஒருவருக்கொருவர் உடல் ரீதியாக விலகி, தொலைத்தொடர்பு சாதனம் வழி திருப்பலியிலும், சமூக ஊடக தளங்களில் வழி மட்டுமே ஒன்றிணைந்தும் உள்ளோம். இது எதிர்பார்க்காத பாஸ்காவாக இருந்தாலும், இத்தகையச் சூழல் இதற்கு முன் நம்மில் எவரும் அனுபவிக்காத ஒன்று என்றாலும், பாஸ்கா பெருவிழாவின் முக்கியச் செய்தி ஆண்டுதோறும் ஒன்றுதான், அதாவது நமது 'எதிர்நோக்கு'

கடந்த சில மாதங்கள் நிச்சயமற்ற காலமாக இருந்தன. மேலும் பலருக்கு எதிர்நோக்கு என்பது குறைவாகவே இருந்துள்ளது. பல வழிகளில் உலகமும் திருஅவையும் ஓர் இருண்ட காலத்தைக் கடந்து செல்கின்றன. மேலும் இந்த இருளை எவ்வாறு புரிந்துகொள்வது என்பதும் ஒரு கேள்வியாக உள்ளது. இயேசுவின் மரணம் மற்றும் விரக்தியை வென்ற பாஸ்கா போன்று வேறு எதுவும் வாழ்க்கைக்கு மீண்டும் நல்ல எதிர்நோக்கைத் தருவதில்லை. எனவே இந்த நேரத்தில், எல்லாவற்றிற்கும் மேலாக, சிறந்த எதிர்நோக்குடனும் மகிழ்ச்சியுடனும் இருப்பதை நாம் தேர்வு செய்வோம்.

பாஸ்கா பெருவிழாவானது திகைப்பூட்டும் இவ்வுலகில் எதிர் நோக்கையும் நிச்சயமற்ற எதிர்காலத்தையும் எதிர்கொள்ளும் நம்பிக்கையையும் தருகிறது. "என் நெஞ்சே! நீ நம்பிக்கை இழப்பது ஏன் ? நீ கலக்கமுறுவது ஏன் ? கடவுளையே நம்பியிரு. என் மீட்பராம் கடவுளை இன்னும் நான் போற்றுவேன்.
என் கடவுளின் மீட்புச் செயல்களை முன்னிட்டு இன்னும் நான் அவருக்கு நன்றி செலுத்துவேன். (திபா *42:11*)

எதிர்நோக்கு ஒன்றே கத்தோலிக்கர்காளகிய நாம் உலகிற்கு வழங்கக்கூடிய மிக முக்கியமான கொடையாகும். துன்பம், வன்முறை மற்றும் அநீதி நிறைந்த இந்த உலகில் நாம் எதிர்நோக்குக் கொண்ட மக்களாக விளங்க அழைக்கப்

பட்டுள்ளோம். இது சாதாரண மனித எதிர்நோக்கு அல்ல. இயேசுவின் உயிர்த்தெழுதலின் மூலம் நமக்கு வரும் எதிர்நோக்கு இதுதான். சோகம், சிரமம் மற்றும் வேதனையை எதிர்கொள்ள, நம்முடைய சொந்த பலத்தையும் வளத்தையும் மட்டும் நம்பியில்லாமல் உயிர்த்தெழுந்த இயேசுவைப் பார்த்து திடம்பெற அழைக்கப் படுகிறோம்.

நாம் தெய்வீகச் சோகம் மற்றும் நம்பிக்கையின் கதையை நமக்கும், ஒருவருக்கொருவருக்கும் மற்றும் நம்மைச் சுற்றியுள்ள சமூகங்களுக்கும் எடுத்துரைக்கும் திருஅவையாக உள்ளோம். துன்பப்படுபவர்களுக்கு, நாம்தான் நம்பிக்கையூட்டும் கதைகள் கூறும் மக்கள். அதிகார அமைப்புகளால் முறியடிக்கப்படுபவர்களுக்கு, நாம் விடுதலையின் கதையை எடுத்துரைப்பவர்கள். நாம் பங்கேற்கும் அடக்குமுறை கொண்ட நடவடிக்கைளில் நாம் நீதியைக் எடுத்துரைக்கும் கதை சொல்பவர்கள். இயேசு இந்த பாஸ்கா பெருவிழா அன்று நமக்குக் கூறவிருக்கும் கதையைப் பகிர்வோம். நாங்கள் நீதியின் கதையைக் கூறுபவர்கள். இந்த பாஸ்கா பெருவிழாவில் இயேசு பகிரும் கதையை நாம் சொல்வோம்.

இந்த பாஸ்கா பெருவிழாவன்று நாம் நமது இல்லங்களிலே முடங்கி இருப்பதால், நம்மை நாமே மாற்றியமைப்போம்; நம்முடைய இருதயமும் மனதும் கிறிஸ்துவில் மையம் கொள்ளச் செய்வோம்; அவரால் ஊட்டமளிக்கப்பட்டு, உணவளிக்கப் பட்டு; பின்னர், நாம் வாழும் இடங்களிலுள்ள மக்களுக்கு மீண்டும் ஒரு முறை, அவர்கள் தங்கள் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் எல்லா சூழல்கள் மத்தியில் நற்செய்தியாகச் செயல்படுவோம். இதனால் அவர்கள் வாழ்க்கை அனைத்திலும் முழுமையைக் கண்டறியக்கூடும்.

நாம் யார் என்பதை மறுபரிசீலனை செய்ய , அதிக சுய-விழிப்புணர்வு பெற , அதிக அன்பான, அதிக இரக்கமுள்ளவராக மாற நெருக்கடிகளும் நமக்கு வாய்ப்புகளை வழங்குகின்றன.

வைரஸ் ஒரு சோதனை. கடவுளால் அல்ல , நம்மால். இது நமது சுக மண்டலங்களிலிருந்து வெளியே வர நமக்குச் சவால் விடுகிறது. முதல் பாஸ்கா பெருவிழா மிகவும் விசுவாசமுள்ளவர்கள் அவர்களது மக்கள் மத்தியிலிருந்து தனிமைப்பட்டு ஓர் அறையில் , வேறுபட்ட அச்சத்துடன் ஒளிந்து கொண்டார்கள். ஒரு தொற்றுநோயிற்கு அஞ்சுவது போல் அல்லாமல் , சீடர்கள் இயேசுவை சிலுவையில் அறைந்த மத மற்றும் அரசியல் அதிகாரிகள் தங்களையும் தாக்கக்கூடும் என்று அஞ்சினார்கள்.

ஆண்டவருடைய உயிர்த்தெழுதல் நம்முடைய பலவீனமான எதிர்நோக்கையும் , தளர்ந்த நம்பிக்கையையும் புதுப்பிக்க வேண்டும். பாஸ்கா பெருவிழாவானது , நம்மை நாமே ஒடுக்கிக்கொள்ளாமல் , ஒவ்வொரு ஆணோடும், பெண்ணோடும், குழந்தையோடும் கடவுள் ஒன்றித்துப் பயணம் செய்வதோடு , அவர் அளிக்கும் அன்புக்கும் நிலைவாழ்வுக்கும், அவரது குரலுக்கும் செவிசாய்க்க அழைக்கிறது.

"அதுமட்டும் அல்ல , துன்பங்களைத் தாங்கிக் கொள்வதிலும் பெருமகிழ்ச்சி கொள்கிறோம். ஏனெனில் , துன்பத்தால் மன உறுதியும் , மன உறுதியால் தகைமையும், தகைமையால் எதிர்நோக்கும் விளையும் என அறிந்திருக்கிறோம். அந்த எதிர்நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது ; எனெனில், நாம் பெற்றுள்ள

தூய ஆவியின் வழியாய்க் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப் பட்டுள்ளது. (*உரோ 5: 3-5*)

இறைமக்கள் மத்தியிலோ அல்லது நற்கருணையிலோ கிறிஸ்துவை நாம் சந்திக்க முடியாத இந்த நேரத்தில், பாதிக்கப்படக்கூடிய இடத்தில் கிறிஸ்துவை எதிர்கொள்ள நமக்கு எப்போதும் வாய்ப்பு உள்ளது. இந்த நேரத்தில் நாம் அனைவரும் யாருக்காவது ஏதாவது ஒன்றைச் செய்ய முடியும். COVID-19 காரணமாக பல நடவடிக்கைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. ஆனால் அவற்றில் அன்புக்கும் இரக்கத்திற்கும் இடம் பெறவில்லை. மற்றவர்களுக்கு, குறிப்பாக வயதானவர்கள், ஊன முற்றோர், ஏழைகள் மற்றும் தனிமைப் படுத்தப்பட்டவர்களுக்கு உதவ உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள். வீடற்றவர்களுக்கும் மற்றவர்களை விட அதிகமாக துன்பப்படுகிற புலம்பெயர்ந்தோருக்கும் உங்கள் இதயங்களை மூடாதீர்கள். தேவைப்படும் அனைவருக்கும் உங்கள் இதயத்தைத் திறந்து வைத்திருங்கள். அவர்களுக்காக பரிந்துரை செய்யுங்கள், இறைவேண்டல் அல்லது தொலைபேசி அழைப்பு மூலம் அவர்களுடன் இணையுங்கள்.

இந்த பாஸ்கா பெருவிழாவை முன்னிட்டு உங்கள் அனைவருக்குமான என் எதிர்நோக்கும் இறைவேண்டலும் என்னவென்றால், ஒரு நீடித்த நாடுகடத்தலைப் போல நாம் சிக்கிக்கொண்டதாக உணர்ந்தாலும், அன்பு வெற்றிபெறும் என்ற நம்பிக்கை நமக்கு இருக்க வேண்டும். ஆழ்ந்த அர்த்தமுள்ள ஒரு வாழ்க்கை நம் அனைவருக்கும் காத்திருக்கிறது என்பதாகும்.

பாஸ்கா பெருவிழா உங்கள் அனைவரின் வாழ்க்கையிலும், குறிப்பாக நம்பிக்கையற்ற சூழ்நிலையில் உழல்வோர் நல்ல எதிர்நோக்கைக் காண மிகவும் சிரமப்படும் இவ்வேளியல் அழியாத நம்பிக்கையை விளைவிக்கட்டும்.

இந்த பாஸ்காவில் நாம் அனைவரும் புதுப்பிக்கப்பட்டு உருமாறுவோம், இதனால் மற்றவர்களையும் புதுப்பித்து உருமாற்றுவோம். நமது, திருஅவை, நமது சமூகங்களிலும் உலகிலும் நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாக இருக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவின் திருப்பாடுகள், மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவை உயிரைக் கையளிப்பவர்களாக இருக்க நமக்கு ஊக்கமளிக்கட்டும். இயேசு உண்மையிலேயே உயிர்த்தெழுந்தார்! அல்லேலூயா!

'இறந்து உயிருடன் எழுப்பபட்ட கிறிஸ்து இனிமேல் இறக்கமாட்டார்; இனி அவர் சாவின் ஆட்சிக்கு உட்பட்டவர் அல்ல என நாம் அறிந்திருக்கிறோம்' (*உரோ 6:9*)

உங்கள் அனைவருக்கும் எனது அருள் நிறைந்த, மகிழ்சியான பாஸ்கா பெருவிழா வாழ்த்துகள்.

உங்களது அன்புள்ள,

பேராயர்,

*மேதகு ஜூலியன் லியாவ் பெங் கிம்*

கோலாலம்பூர் மாமறை மாவட்டம்